செய்தி வெளியீடு எண்.125 நாள். 20.2.2009

# தமிழ்நாடு சுற்றுலா

# செய்தி வெளியீடு

**சென்னையிலிருந்து மாமல்லபுரம் வரையில் உள்ள கிழக்கு கடற்கரை சாலையில் சுற்றுலா திட்டங்களை மேம்படுத்தும் நோக்கில், கிழக்கு கடற்கரை சாலையில் சுற்றுலா திட்டங்களை அமைக்க அரசு தனியார் முதலீட்டார்களை ஊக்குவித்து வருகிறது. அதன் பயனாக பின்வரும் கேளிக்கை பூங்காக்கள் பொழுதுபோக்கு பூங்காக்கள் அரசாலும் தனியார் முதலீட்டாளர்களாலும் அமைக்கப்பட்டு உள்ளன.**

1) அருள்மிகு மருதீஸ்வரர் கோயில், திருவான்மியூர்
2) வி.ஜி.பி தங்க கடற்கரை
3) மாயாஜால்
4) எம்.ஜி.எம் (MGM Dizzy World)
5) தட்சிண சித்ரா
6) படகு குழாம், முட்டுக்காடு
7) அருள்மிகு நித்திய கல்யாண பெருமாள் கோயில், திருவிடந்தை
8) முதலை பண்ணை
9) கடற்சிங்கம் கண்காட்சி (Sea lion show)
10) புலிக்குகை
11) கடற்கரை கோயில், மாமல்லபுரம்
12) அர்ஜுனன் தவசு பாறை
13) ஐந்து இரதம்

**இத்தகைய கேளிக்கை பூங்கா/பொழுதுபோக்கு பூங்காவிற்கு வருகை தரும் சுற்றுலா பயணிகளின் வசதிக்காக ஓர் இடத்தில் இறக்கிவிட்டு மீண்டும் அழைத்து செல்லும் திட்டமான** HOP on Hop off tour **சுற்றுலா திட்டத்தை தமிழகத்திலேயே முதல் முறையாக சென்னையிலிருந்து மாமல்லபுரம் வரை செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டு, தமிழ்நாடு சுற்றுலா கழகத்தின் சீரிய முயற்சியால் 4 புதிய குளிர்சாதனம் செய்யப்பட்ட 18 இருக்கைகள் கொண்ட பேருந்துகள் ஏற்பாடு செய்யப்பட்டு அப்பேருந்துகளுக்கு தேவையான சீருடையுடன் கூடிய ஓட்டுநர்கள் சிறப்பு வழிகாட்டிகளை தேர்வு செய்து இந்த** Hop on Hop off **முதல் சுற்றுலாவை வரும் 20.2.2009 அன்று காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் துவக்கிவைத்தார்கள், போக்குவரத்து துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு, மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்**

**திரு.என்.சுரேஷ்ராஜன் அவர்கள் மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு பரிதி இளம்வழுதி, ஆகியோர் கலந்துகொண்டனர்.**

**இந்த சுற்றுலாவில் பயணம் செய்யும் பயணிகளுக்கு கட்டணமாக ஒரு நபருக்கு ரூ.250 என்று நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேலும் சென்னையிலிருந்து மாமல்லபுரம் வரையிலுள்ள சுற்றுலா இடங்களில் உள்ள பொழுது போக்கு பூங்காக்களின் நுழைவு கட்டணத்தில்** 10% **முதல்** 27% **வரை சலுகை பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் சலுகையாக இந்த சுற்றுலாவில் பயணம் செய்யும் சுற்றுலா பயணிகளுக்கு முதல்** 30 **நாட்களுக்கு** 25% **சலுகை கட்டணம் பெறவும் வகை செய்யப்பட்டுள்ளது.**

**இச்சுற்றுலாவின் சிறப்பு அம்சமாக 4 புதிய குளிர்சாதன பேருந்துகளும் மணிக்கு ஒரு முறை அனைத்து சுற்றுலா இடங்களுக்கும் வந்து செல்லுமாறு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இச்சுற்றுலாவில் பயணிகள் பேருந்தில் எந்த இடத்திலும் ஏறி, எந்த இடத்திலும் இறங்கி கொள்ளலாம். இவ்வகையான பேருந்துகள் சென்னையில் காலை 9.00 மணிக்கு கடைசி பேருந்து மாலை 4.00 மணிக்கு புறப்பட்டுச் செல்லவும், இதே போன்று மாமல்லபுரத்திலிருந்து 10.40 மணிக்கு கடைசி பேருந்து மாலை 5.40 மணிக்கும் புறப்பட்டு சென்னை வந்தடையும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.**

**இச்சுற்றுலாவின் பயணச் சீட்டுக்கள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக சுற்றுலா வளாகத்திலும் சென்னையிலுள்ள அனைத்து முன்னனி ஒட்டல்களிலும் கிடைக்குமாறு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.**

**பொது மக்களும் சுற்றுலா பயணிகளும் மேலும் விவரங்கள் பெற கீழ்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.**

1. **தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்,**
   **எண் 2 வாலாஜா சாலை, சென்னை 2**
   **தொலைபேசி எண்.25383333, 25384444 / 25389857**

2. **த.சு.வ.கழக விற்பனை பிரிவு,**
   **எண்.4, ஈ.வெ.ரா. சாலை, சென்னை 3**
   **தொலைபேசி எண். 25384356, 25382916.**

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–**9.**